NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 13 January 2022

# முப்பரிமாணப் படிமத் தொழில்நுட்பம் மூலம் கூடுதல் பயிற்சி



முப்பரிமாணப் படிமத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிற்சியில் ஈடுபடும் என்யுஎஸ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ, தாதிமைத் துறை மாணவர்கள். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பயிலும் இரண்டாம், மூன்றாம் ஆண்டு மருத்துவ, தாதிமைத் துறை மாணவர்கள் 300 பேருக்கு முப்பரிமாணப் படிமத் தொழில்நுட்பக் கற்றல் முறை மூலம் கூடுதல் பயிற்சி அளிக்கப்படும்.

மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மருத்துவ, தாதிமைத் துறை மாணவர்கள் வேலை அனுபவப் பயிற்சிக்குச் செல்வதற்கு முன்பு அவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும்.

இத்திட்டத்தின்போது சிறுநீரை வெளியேற்ற உதவும் குழாயையும் நோயாளிகளுக்குத் தேவையான திரவத்தை உடலுக்குள் செலுத்த பயன்படுத்தப்படும் குழாயையும் உடலுக்குள் செலுத்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.